OS: 656/2018

Date: 27.01.2025

பெயர் :ராஜா (எ) ராஜ்மோகன்

**பிரதிவாதி தரப்பு சாட்சி 1 ஆஜர், சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி :</u>**- 8 முதல் 12 பிரதிவாதிகள் தரப்பில்

நான் சொல்வதுபோல் எந்த ஒரு பாகப்பிரிவினையும் இதுவரை ஏற்படவில்லை என்றால் சரியல்ல, எனது தாத்தா குழந்தை வாங்கிய சொத்துக்களில் பின்னிட்டு அந்த சொத்துக்கள் எங்களது அனுபவத்திலும், சுவாதீனத்திலும் இருந்து வருகிறது. மேற்படி சொத்துக்களில் எனது தந்தை வீடு கட்டிவிட்டார் என்றும், சொத்துக்களுக்கு கந்தாய ரசீது தொடர்ந்து கட்டிவருகிறார் என்பதால் மட்டுமே சொத்துக்களுக்கு முழுமையாக பாகப்பிரிவினை ஏற்படாது என்றால் சரியல்ல. சின்னபையனின் சகோதரிகள், வாதிகளின் சகோதரிகள், எனது தகப்பனாரின் சகோதரிகள் ஆகியோர்களை வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கப்படவில்லை என்பதால் தள்ளுபடியாகவேண்டும் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை பொறுத்து ஒரு பாகஸ்தர் வழக்கு தாக்கல் செய்தாலும் அந்த வழக்கு சட்டப்படி செல்லத்தக்கது என்றால் சரியல்ல. பாகப்பிரிவினை ஏற்படாமல் அவரவர்கள் அனுபவம் செய்துவருவதாலும், அவரவர்கள் குடியிருந்து வருவதாலும், இறந்தவர்களை அடக்கம் செய்யப்பட்ட பகுதியாலும் பாகப்பிரிவினை ஏற்பட்டதாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. கந்தசாமி, வீரமுத்து, கோவிந்தன் ஆகிய மூவரும் பாகப்பிரிவினை ஏற்படவில்லை என்றும், UDR பட்டாவில் மட்டுமே பாகப்பிரிவினை ஏற்படாது என்றால் சரியல்ல. 07.11.1933 ம் ஆண்டு முருகன் அவரது மனைவி அய்யமாளுக்கு செட்டில்மெண்ட் எழுதிவைத்தது பற்றி சின்னபையனுக்கு தெரியாது என்றால் சரியல்ல, முருகனுக்கு பாகப்பிரிவினை படி சொத்துக்கள் பிரிந்ததால் தான் செட்டில்மெண்ட் எழுதிவைத்தார்.

மேற்படி செட்டில்மெண்ட ஆவணத்தில் முருகனுக்கு இந்த தேதியிட்ட பாகப்பிரிவினை ஆவணப்படி சொத்துக்கள் பிரிந்ததாக சொல்லியுள்ளாரா என்றால் எனக்கு தெரியாது. மேற்படி செட்டில்மெண்ட் பத்திரத்தில் சர்வே எண்.73 ல் உள்ள மொத்த நிலத்தில் 1/8 நிலம் என எழுதியுள்ளாரா என்றால் ஆம். மீதியுள்ள 7 பாக நிலம் யார் யாருக்கு எவ்வளவு நிலம் என குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. அய்யமாளுக்கு எழுதப்பட்ட செட்டில்மெண்ட ஆவணத்தில் மீதமுள்ள 7 பாகத்தை யாருக்கு என குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளதா என்றால்

இல்லை. எனது முதல் விசாரணை பிரமாண பத்திரிக்கையில் முருகனுக்கும், சின்னபையனுக்கு வாய்மொழியாக பாகம் ஏற்பட்டது என்று குறிப்பிட்டுள்ளேன். மீதி 7 பாகம் யாருக்கு என குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி செட்டில்மெண்ட் பத்திரத்தில் முருகனுக்கு பாகப்பிரிவினை படி வாய்மொழியாக பாத்தியப்பட்டது என எந்த இடத்திலும் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. அந்த தானசெட்டில்மெண்ட் ஆவணமே சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. சர்வே எண்.71 ல் 1 ஏக்கர் 75 செண்டில் 1/8 பாகம் என காட்டப்பட்டுள்ளது மீதி 7 பாகம் யாருக்கு என காட்டப்படவில்லை என்றால் சரிதான். நான் சொல்லியுள்ள இரண்டு சர்வே எண்களிலும் சேர்த்து மொத்தம் 1 ஏக்கர் 12 ½ செண்ட் நிலம் என்றால் அதிகமாக இருக்கும். அய்யம்மாள் பெயரில் உள்ள பட்டா எண்.7 ன் படி மொத்தமாக 1 ஏக்கர் 67 செண்ட் நிலம் உள்ளது என்றால் சரிதான். ஆனால் செட்டில்மெண்ட் ஆவணத்தில் 1 ஏக்கர் 12 ½ செண்ட் மட்டுமே காட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அய்யம்மாள் பெயரில் 1 ஏக்கர் 67 செண்ட் நிலம் காட்டப்பட்டுள்ளதால் தான் பாகப்பிரிவினையே நடைபெறவில்லை என்றால் சரியல்ல. அய்யம்மாள் பெயரில் ஏற்பட்ட செட்டில்மெண்டிற்கும் பட்டாவிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

செட்டில்மெண்ட் ஆவணத்தில் உள்ள விஷ்தீரனத்திற்கும் பட்டாவில் உள்ள விஷ்தீரனத்திற்கும் வித்தியாசம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி மண் வளம் உள்ள பூமிகள் பிரிக்கப்பட்டதால் அவ்வாறு வித்தியாசங்கள் வந்தது. மண் வளத்தை பொறுத்து செட்டில்மெணட் எழுதிவைக்கப்பட்டது நேரடியாக தெரியுமா என்றால் எனக்கு தெரியாது, எனது பாட்டி எனது தந்தைக்கு சொன்னார் எனது தந்தையிடம் இருந்து நான் தெரிந்துகொண்டேன். ஏற்கனவே பாகப்பிரிவினை ஏற்பட்டுவிட்டதாகவும், முருகன் அவரது மனைவி அய்யமாளுக்கு செட்டில்மெண்ட எழுதிவைக்கப்பட்டதாக சொல்வதும் உண்மையல்ல என்று சொன்னால் சரியல்ல. வாதி பிரதிவாதிகளுக்கு பாகப்பிரிவினையே ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்கள் நாளதுவரை கூட்டு குடும்ப சொத்துக்களாகவே அனுபவித்து வரப்படுகிறது என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**:- இல்லை.

ஒப்பம்/-DW1
ஒப்பம்/- சார்பு நீதிபதி, ஓமலூர்